ந.க.எண்.அ1/109/6114/2023
ஆணை எண்: 310/2024

கூடுதல் காவல்துறை இயக்குநர்,அலுவலகம்,
தொழில் நுட்பசேவைகள்,
சென்னை-04

நாள்: 01.10.2024.

பணிவரன்முறைப்படுத்துதல் ஆணை

பொருள்: காவல் - காவல் தொலைத்தொடர்பு பிரிவு - அமைச்சுப்பணி-கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்று பணி புரிந்து வரும் திரு.K.சரவணபிரியன், இளநிலை உதவியாளர், காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை - தற்காலிக இளநிலைஉதவியாளர் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடுவது-தொடர்பாக.

பார்வை:
1. அரசுக்கடித எண்.7819/காவல்-15/2022-2, நாள்:21.11.2022.
2. தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.2528450/சி.ஏ.ஆர்-1/2022, நாள்:03.12.2022.
3. தலைமை அலுவலக பணிநியமன ஆணை ந.க.எண்.3756001/NGB II (2)/2022-8 நாள்:02.05.2023.

*****

திரு.K.சரவணபிரியன், த/பெ (லேட்) கிருஷ்ணமூர்த்தி, காவல் உதவி ஆய்வாளர், (குற்ற ஆவணக் காப்பகம்) என்பவர் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.20784/சி.ஏ.1/2010, நாள்: 23.06.2010 மற்றும் சென்னை காவல் அலுவலக ஆணை எண்:3903/2010, ந.க.எண்: க.அ.ப.நி.1/229/051883/2010, நாள்:01.10.2010-ன்படி சென்னை காவல் அலுவலகத்தில் கணினி விவரப்பதிவாளராக 11.10.2010 அன்று பணிக்கு அறிக்கை செய்துள்ளார். மேலும், இவரது தற்காலிக கணினி விவரப்பதிவாளர் பணி அரசாணை நிலை எண்.220, உள் (காவல்.15) துறை நாள்:18.02.2016 மற்றும் தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்: 175817/A&R-1/2007, நாள்:14.03.2016 மற்றும் சென்னை காவல் அலுவலக ஆணை எண்.1733/2016, ந.க.எண்:CGA/118/37997/2016, நாள்:09.05.2016-ன்படி 11.10.2010 முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேலும், தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்.3756001/NGB II (2)/2022-8, நாள்:02.05.2023-ன் படி, மேற்படி கணினி விவரப்பதிவாளர் 2022-2023-ம் ஆண்டிற்கான கணினி விவரப்பதிவாளரிலிருந்து இளநிலை உதவியாளர் பணிமாறுதலுக்கான பட்டியலில் வரிசைஎண்.36-ல் சேர்க்கப்பட்டு காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 01.06.2023 மு.ப. அன்று பணிக்கு அறிக்கை செய்துள்ளார்.

3) மேலும், பார்வை 1-ல் காணும் அரசுக் கடிதத்தின்படி தனியர் திரு.K.சரவணபிரியன் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி மூன்று ஆண்டுகளுக்குள் மனு சமர்ப்பித்துள்ளார், மனு சமர்ப்பித்த நாளில் தனியர் 18 வயது

Scanned with OKEN Scanner

நிறைவடைந்தவராகவும் மற்றும் 35 வயதுக்குட்பட்டவராகவும் இருந்துள்ளதால், தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 15 மற்றும் பிரிவு 20(6) (b)- ஆகியவை மனுதாரரின் கணினி விரைப்பதிவாளர் பணிநியமனத்தின் போது பின்பற்றப்பட்டுள்ளது. மேலும், தனியர் கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்கு அனைத்து தகுதிகளையும் பெற்றிருந்ததாலும், கணினி விரைப்பதிவாளர் பணியில், பணிவரன்முறை மேற்கொள்ள விதிதளர்வு ஏதும் தேவைப்படாத காரணத்தினாலும், தனியரின் பணி 11.10.2010 முதல் கணினி விரைப்பதிவாளர் பதவியில் ஏற்கனவே பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர், அதன் பின்னர் பார்வை 3-ல் காணும் தலைமை அலுவலக ஆணையின்படி 2022-2023 ஆண்டிற்கான கணினி விரைப்பதிவாளரிலிருந்து இளநிலை உதவியாளர் பணிமாறுதலுக்கான பட்டியலில் வரிசை எண்.36-ல் சேர்க்கப்பட்டு 01.06.2023 மு.ப. பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்

4) எனவே, தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் கீழ் பணிமாறுதல் மூலம் தட்டச்சர்/ இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட தனியர்களுக்கு, விதி தளர்வு தேவைப்படாத நேர்வுகளில் பணிவரன் முறையை உரிய பணி நியமனம் செய்யும் அலுவலர் நிலையிலேயே மேற்கொள்ளலாம் என்று அரசு கடித எண்.7819/ காவல்.15/2022-2, நாள்:21.11.2022-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு உரிய நடவடிக்கை மேற்கொள்ள பார்வை 2-ல் காணும் தலைமை அலுவலக குறிப்பாணை மூலமாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

5) எனவே, அரசு கடித எண்.7819/ காவல்.15/2022-2, நாள்:21.11.2022-ன் படி திரு.K.சரவணபிரியன், த/பெ (லேட்) கிருஷ்ணமூர்த்தி, காவல் உதவி ஆய்வாளர் என்பவரது தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியினை அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 01.06.2023 மு.ப முதல் பணிவரன்முறைபடுத்தி ஆணையிடப்படுகிறது.

ஒம்/- ரா. தமிழ் சந்திரன்,
கூடுதல் காவல்துறை இயக்குநர்,
தொழில்நுட்ப சேவைகள்,
சென்னை-4.

பெறுநர்:
திரு.K.சரவணபிரியன், இளநிலைஉதவியாளர், காவல் தொலைத் தொடர்பு பிரிவு.
நகல்:
காவல்துறை தலைமை இயக்குனர், தமிழ்நாடு, சென்னை-4.
காவல்துறை தலைவர், தொழில்நுட்ப சேவைகள், சென்னை-4.
நிர்வாக அலுவலர் (நிர்வாகம் & கணக்கு), காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை-4.
அனைத்து கண்காணிப்பாளர்கள், காவல் தொலைத்தொடர்பு பிரிவு, சென்னை-4.
ஆணைப் புத்தகம்.

/உ.ந.உ.ப/

R. [signature]
நிர்வாக அதிகாரி (நிர்வாகம்),
காவல் தொலைதொடர்பு பிரிவு,
சென்னை-4.

[signature]

Scanned with OKEN Scanner